**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை : திருமதி.ஜா.ஆ.ஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ம் நாள் சனிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், சித்திரை திங்கள் 05ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.50/2025**

CNR No.TNDG100005642025

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்.684/2024

எதிரியின் பெயர் – ரஞ்சித் 36/2024 த/பெ.ஜெயக்கொடி MG,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No.814/2020/RG/FI(P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
| **CASE SUMMARY** | | | | | |
| (i) | The period of remand of the accused | : | Name of the Accused | Date of Arrest/Remand | Release on |
| | | | ரஞ்சித் 36/2024<br>த/பெ.ஜெயக்கொடி MG,<br>ஜெய்பீமா நகர், சாம்ராஜ் பேட்டை,<br>பெங்களூர். | 27.12.2024 | 27.12.2024 |
| (ii) | Date of filing of the complaint/final report in the court | : | Filing of Complaint | Filing of Final Report | |
| | | | 22.12.2024 | 12.03.2025 | |
| (iii) | Date of committal of the cases to the Court of Sessions: | : | Nil | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:32:33 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | Date of questioning of the accused under Section 228, 240 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be; | : | 26.05.2025ம் தேதி அன்று நத்தம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட எதிரி மீது பிரிவுகள் 281, 106(1)BNSன் கீழ் குற்றம் குறித்து விளக்கி கூறப்பட்டது. | | |
| (v) | Filing of all miscellaneous petitions and their results | : | Crl.M.P.No. | Date of Filing | Result |
| (vi) | Date of Examination in Chief and Cross | : | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | | PW1 திரு.இளவரசன் | 12.03.2026 | 12.03.2026 |
| | | | PW2 திரு.ரஞ்சித் | 23.03.2026 | 23.03.2026 |
| | | | PW3 திரு.வினோத் | 23.03.2026 | 23.03.2026 |
| | | | PW4 திரு.ராஜா | 23.03.2026 | 23.03.2026 |
| | | | PW5 திரு.சிவராமகிருஷ்ணன் | 08.04.2026 | 08.04.2026 |
| (vii) | Date of examination of the accused under section 313 of the Code; | | 10.04.2026 | | |
| (viii) | Details of abscondance of an accused and his appearance /production, as the case may be; and | | Nil | | |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result |
| | | | Nil | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:32:39 +0530

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டு: | : | கடந்த 22.12.2024ம் தேதி மதியம் சுமார் 03.45 மணியளவில் TN 57 K 0357 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splendor இருசக்கர வாகனத்தில் ராஜேந்திரன் வண்டியை ஓட்ட அவரது மனைவி சுமதி பின்னால் உட்கார்ந்து கொண்டு நத்தம் TO மதுரை செல்லும் பைபாஸ் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கு வந்து வாதி இளவரசின் ஊருக்கு செல்வதற்காக சாத்தாம்பாடி பிரிவில் பைபாஸ் சாலையை கடப்பதற்கு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வண்டியை ஓட்டிச் சென்று கொண்டிருந்த போது மேற்படி ரோட்டில் வடக்கிலிருந்து, தெற்கு நோக்கி KA 01 MF 8552 என்ற பதிவெண்கொண்ட சிப்ட் காரை ஓட்டி வந்த எதிரி அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும், முரட்டுத்தனமாகவும், கவனக்குறைவாகவும் காரை ஓட்டிவந்து வாதி இளவரசின் அப்பா ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தில் மோதி வாதியின் அப்பா ராஜேந்திரனுக்கு வலது கை, வலது கால், தலையின் பின்புறம் ஆகிய இடங்களிலும், வாதியின் அம்மா சுமதிக்கு தாடை, இடது கன்னம் வலது முழங்கை ஆகிய இடங்களிலும், பலத்த காயத்தை ஏற்படுத்தி இருவருக்கும் மரணத்தை ஏற்படுத்தியதாக பிரிவுகள் 281, 106(1) (2 எண்ணிக்கை) BNSன் கீழும் குற்றம் சாட்டப்பட்டது. |
| எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | : | இறுதியாக, அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, இவ்வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) (2 எண்ணிக்கை) BNSன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, மேற்படி எதிரியை 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| தண்டனை (அ) உத்தரவு | : | எதிரி நிறைவேற்றி தந்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை. |

இவ்வழக்கு 07.04.2025ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 10.04.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் திரு.K.மூர்த்தி வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:32:45 +0530

பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் வாயிலாக எழுந்துள்ளது. இதற்கு பின்பு பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 (The Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNSS என்றும், பாரதிய நியாய சட்டம் 2023 (The Bharatiya Nyaya Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNS என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் –**

கடந்த 22.12.2024ம் தேதி மதியம் சுமார் 03.45 மணியளவில் TN 57 K 0357 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splendor இருசக்கர வாகனத்தில் ராஜேந்திரன் வண்டியை ஓட்ட அவரது மனைவி சுமதி பின்னால் உட்கார்ந்து கொண்டு நத்தம் TO மதுரை செல்லும் பைபாஸ் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கு வந்து வாதி இளவரசின் ஊருக்கு செல்வதற்காக சாத்தாம்பாடி பிரிவில் பைபாஸ் சாலையை கடப்பதற்கு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வண்டியை ஓட்டிச் சென்று கொண்டிருந்த போது மேற்படி ரோட்டில் வடக்கிலிருந்து, தெற்கு நோக்கி KA 01 MF 8552 என்ற பதிவெண்கொண்ட சிப்ட் காரை ஓட்டி வந்த எதிரி அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும், முரட்டுத்தனமாகவும், கவனக்குறைவாகவும் காரை ஓட்டிவந்து வாதி இளவரசின் அப்பா ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தில் மோதி வாதியின் அப்பா

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:32:50 +0530

ராஜேந்திரனுக்கு வலது கை, வலது கால், தலையின் பின்புறம் ஆகிய இடங்களிலும், வாதியின் அம்மா சுமதிக்கு தாடை, இடது கன்னம் வலது முழங்கை ஆகிய இடங்களிலும், பலத்த காயத்தை ஏற்படுத்தி இருவருக்கும் மரணத்தை ஏற்படுத்தியதாக நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் 24.01.2025ம் தேதி பிரிவுகள் 281, 106(1) BNSன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS, 2023 பிரிவு 230–ன் கீழ் 12.05.2025ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிக்கு போதிய அவகாசம் அளித்து ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், முதல் நோக்கு ஆதாரங்கள் இருந்ததால் 26.05.2025ம் தேதியன்று எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) (2 எண்ணிக்கை) BNSன் கீழ் குற்றம் குறித்து பிரிவு 263 BNSS –ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.16 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. எதிரி

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:32:58 +0530

தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**<u>6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –</u>**

7. கடந்த 22.12.2024ம் தேதி மதியம் சுமார் 03.45 மணியளவில் TN 57 K 0357 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splendor இருசக்கர வாகனத்தில் ராஜேந்திரன் வண்டியை ஓட்ட அவரது மனைவி சுமதி பின்னால் உட்கார்ந்து கொண்டு நத்தம் TO மதுரை செல்லும் பைபாஸ் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கு வந்து வாதி இளவரசின் ஊருக்கு செல்வதற்காக சாத்தாம்பாடி பிரிவில் பைபாஸ் சாலையை கடப்பதற்கு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வண்டியை ஓட்டிச் சென்று கொண்டிருந்த போது மேற்படி ரோட்டில் வடக்கிலிருந்து, தெற்கு நோக்கி KA 01 MF 8552 என்ற பதிவெண்கொண்ட சிப்ட் காரை ஓட்டி வந்த எதிரி அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும், முரட்டுத்தனமாகவும், கவனக்குறைவாகவும் காரை ஓட்டிவந்து வாதி இளவரசின் அப்பா ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தில் மோதி வாதியின் அப்பா ராஜேந்திரனுக்கு வலது கை, வலது கால், தலையின் பின்புறம் ஆகிய இடங்களிலும், வாதியின் அம்மா சுமதிக்கு தாடை, இடது கன்னம் வலது முழங்கை ஆகிய இடங்களிலும், பலத்த காயத்தை ஏற்படுத்தி இருவருக்கும் மரணத்தை ஏற்படுத்தியதாக அ.சா.1 ஆனவர் அ.சா.5 காவல் ஆய்வாளர் சிவராமகிருஷ்ணன் என்பவரிடம் அ.த.சா.ஆ.1 புகார் செய்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.18 07:33:11 +0530

8. மேற்படி புகாரை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அ.சா.5 காவல் ஆய்வாளர் சிவராமகிருஷ்ணன் நத்தம் காவல்நிலைய குற்ற எண்.கு.எண்.684/2024 சட்டப்பிரிவுகள் 281, 106(1) (Double death) BNS ஆக அ.த.சா.ஆ.4 முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளார். சம்பவ இடமான நத்தம் – மதுரை பைபாஸ் ரோடு சாத்தாம்பாடி பிரிவு அருகே சென்று சம்பவ இட சாட்சிகள் அ.சா.3 வினோத் மற்றும் அ.சா.4 ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் அ.த.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்து பின்னர் பட்டியல் சாட்சிகளான இளவரசன், ராஜா, த/பெ.ராஜேந்திரன், சதீஸ்குமார், பிரவீன்குமார், வினோத் மற்றும் ராஜா, த/பெ, ஊர்க்காவலன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 23.12.2024ம் தேதி வாகன விபத்தில் இறந்த நபரான ராஜேந்திரன் என்பவரது பிரேதத்தை நத்தம் அரசு மருத்துவமனையில் காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்தும், மேலும் இவ்வழக்கில் இறந்து போன மற்றொரு நபரான சுமதி என்பவரின் பிரேதத்தை சார்பு ஆய்வாளர் திரு.தர்மர் என்பவர் பிரேத விசாரணை செய்தும், அ.த.சா.ஆ.7 மற்றும் அ.த.சா.ஆ.8 பிரேத விசாரணை அறிக்கைகள் பெற்றும், பின்னர் ராஜேந்திரன் என்பவரின் பிரேத பரிசோதனை அலுவலாக முதல்நிலை காவலர் ஆண்டிச்சாமி என்பவரும், சுமதி என்பவரின் பிரேத பரிசோதனை அலுவலாக கலைச்செல்வி என்பவரும் நியமிக்கப்பட்டு அ.த.சா.ஆ.9 மற்றும் அ.த.சா.ஆ.10 பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியும், இவ்வழக்கின் எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:33:18 +0530

9. மேலும் KA 01 MF 8552 என்ற பதிவெண்கொண்ட மாருதி ஸிப்ட் என்ற காரை மோட்டார் வாகனத்தையும், TN 57 K 0357 என்ற பதிவெண்கொண்ட ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தையும் ஆய்விற்கு உட்படுத்த அ.த.சா.ஆ.11 மற்றும் அ.த.சா.ஆ.12 வேண்டுக்கோள் கடிதம் கொடுத்து அனுப்பியும், பிரேதங்களை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. திலீப் ராஜேஷ்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று அ.த.சா.ஆ.13 மற்றும் அ.த.சா.ஆ.14 பிரேத பரிசோதனை அறிக்கைகள் பெற்றும், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கருப்பசாமி என்பவரை விசாரித்து அ.த.சா.ஆ.15 மற்றும் அ.த.சா.ஆ.16 மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்றும், மேலும், பிரேத பரிசோதனை அலுவலாக நியமிக்கப்பட்ட முதல்நிலை காவலர் ஆண்டிச்சாமி மற்றும் பெண் காவலர் கலைச்செல்வி ஆகியோர்களை அன்றையதினமே தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் 20.01.2025ம் தேதி எதிரி ரஞ்சித் என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS பிரிவுகளின்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

10. அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக பாதகமாக உள்ள சாட்சியங்கள் பற்றி பிரிவு 351(1)(b) of BNSS, 2023–ன் படி 10.04.2026ம் தேதி கேள்விகள் கேட்டபோது, எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:33:25 +0530

11. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தங்களது வாதத்தில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள வழக்கு அரசுதரப்பு சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், குற்றவாளிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

12. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எதிரி தரப்பில், வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்ததாக கூறுவது உண்மையல்ல என்றும், வழக்கில் கூறப்படுவது போல விபத்தானது ஏற்படவில்லை என்றும், எதிரி வாகனத்தை மெதுவாக ஓட்டி வந்துள்ளார் என்றும், இறந்த நபர் ராஜேந்திரன் தான் இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்தார் என்பதை புகார்தாரரான அ.சா.1 மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2யே தனது குறுக்குவிசாரணையில் ஒத்துக்கொள்ளும் நிலையிலும், எதிரி வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்ததாகவோ, எதிரியுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவோ நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்றும், எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்து உத்தரவிடவேண்டியது அவசியம் என வாதிடப்பட்டுள்ளது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:33:29 +0530

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:</u>**

13. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

**<u>தீர்வு</u>**

14.1. கடந்த 22.12.2024ம் தேதி மதியம் சுமார் 03.45 மணியளவில் TN 57 K 0357 என்ற பதிவெண்கொண்ட Hero Honda Splendor இருசக்கர வாகனத்தில் ராஜேந்திரன் வண்டியை ஓட்ட அவரது மனைவி சுமதி பின்னால் உட்கார்ந்து கொண்டு நத்தம் TO மதுரை செல்லும் பைபாஸ் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கு வந்து வாதி இளவரசின் ஊருக்கு செல்வதற்காக சாத்தாம்பாடி பிரிவில் பைபாஸ் சாலையை கடப்பதற்கு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வண்டியை ஓட்டிச் சென்று கொண்டிருந்த போது மேற்படி ரோட்டில் வடக்கிலிருந்து, தெற்கு நோக்கி KA 01 MF 8552 என்ற பதிவெண்கொண்ட சிப்ட் காரை ஓட்டி வந்த எதிரி அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும், முரட்டுத்தனமாகவும், கவனக்குறைவாகவும் காரை ஓட்டிவந்து வாதி இளவரசின் அப்பா ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தில் மோதி வாதியின் அப்பா ராஜேந்திரனுக்கு வலது கை, வலது கால், தலையின் பின்புறம் ஆகிய இடங்களிலும், வாதியின் அம்மா சுமதிக்கு தாடை, இடது கன்னம் வலது முழங்கை ஆகிய இடங்களிலும், பலத்த காயத்தை ஏற்படுத்தி

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.18 07:33:36 +0530

இருவருக்கும் மரணத்தை ஏற்படுத்தியதாகவும் அதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிடமே உள்ளது. எதிரி தரப்பில் வழக்கில் கூறப்படுவது போல விபத்தானது ஏற்படவில்லை என்றும், இறந்த நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

14.2. எதிரி பொது சாலையில் வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்து கவனக்குறைவாக செயல்பட்டு அதன் விளைவால் ராஜேந்திரன் மற்றும் சுமதி என்பவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் கூறப்படும் நிலையில் அதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 மற்றும் பார்வை மகஜர் அ.த.சா.ஆ.6 ஆகியவற்றின் வாயிலாக சம்பவமானது நத்தம் – மதுரை பைபாஸ் ரோடு சாத்தாம்பாடி பிரிவு அருகே நடந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. அ.த.சா.ஆ.1 புகார் மனுவிலும் சம்பவ இடமாக அ.த.சா.ஆ.5, அ.த.சா.ஆ.6 ல் கண்ட இடத்தையே தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் "சுமார் 7, 8 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் நத்தத்திற்கு வந்துவிட்டு எனது ஊரான கோமணாம்பட்டிக்கு செல்லும் வழியில் விபத்து நடந்தது தொடர்பாக சாத்தாம்பட்டி விலக்கு அருகே போலீசார் விபத்து குறித்து விசாரித்து என்னிடமும், எனது மாமா ராஜா என்பவரிடமும் சாட்சியாக இருக்கக்கேட்டு கையொப்பம் வாங்கினார்கள்" என்று தெரிவித்துள்ளார். மற்றொரு மகஜர் சாட்சியான அ.சா.4 தனது

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:33:42 +0530

சாட்சியத்தில் "சுமார் 7, 8 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் நத்தத்திற்கு வந்துவிட்டு எனது ஊரான கோமணாம்பட்டிக்கு செல்லும் வழியில் சாத்தாம்பட்டி விலக்கு அருகே மாலை சுமார் 4.00 முதல் 5.00 மணியளவில் விபத்து நடந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. விபத்து தொடர்பாக போலீசார் விசாரித்து என்னிடமும், எனது அக்கா மகன் வினோத் என்பவரிடமும் சாட்சியாக இருக்கக்கேட்டு கையொப்பம் வாங்கினார்கள்" என்று தெரிவித்துள்ளார். இதன்மூலம் பார்வை மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எனவே சம்பவ இடம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

14.3. மேலும் சம்பவத்தின் வாயிலாக ராஜேந்திரன் மற்றும் சுமதி என்பவர்கள் இறந்துள்ளார்கள் என்பதும், ராஜேந்திரன் TN 57 K 0357 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்துள்ளார் என்பதும் அ.த.சா.ஆ.7 மற்றும் அ.த.சா.ஆ.8 பிரேத விசாரணை அறிக்கைகள், அ.த.சா.ஆ.13 மற்றும் அ.த.சா.ஆ.14 பிரேத பரிசோதனை அறிக்கைகள், அ.த.சா.ஆ.15 மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது. அ.த.சா.ஆ.13 ராஜேந்திரன் மற்றும் அ.த.சா.ஆ.14 சுமதி என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கைகளில் "Opinion as to cause of death என்ற காலத்தில் The deceased would appear to have died of...Hemorrhagic shock and Hypovolemic shock due to sustained injury என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சாலை விபத்தின் போது அதிகப்படியான ரத்தப்போக்கினால் மற்றும்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:33:48 +0530

ஹைப்போவோலமிக் அதிர்ச்சி ஆகிய காரணங்களினால் ராஜேந்திரன் மற்றும் சுமதி இறந்துள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது.

14.4. அதேபோல் அ.த.சா.ஆ.16 ஆன TN 57 K 0357 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் "Front handle bar bend. Handlebar Brake and clutch cover cut, Front right side Indicator broken, front crash guard right side bend, front suspension fork bend, fuel tank pressing inside of dent, Right side silencer tail pipe bend, Rear suspension Right side coil spring cut and Removed condition, Right side Engine side Body broken and damaged ஆகிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், விபத்தானது வாகன இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது. அ.த.சா.ஆ.15 KA 01 MF 8552 என்ற மாருதி ஸிப்ட் காரின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையை பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி ஆவணங்கள் வாயிலாக மாருதி ஸிப்ட் காரும், இருசக்கர வாகனமும் நேருக்கு நேராக மோதியதில் இரு சக்கர வாகனத்தின் முன்பக்கமாக மோதி, வலது பக்கமாக விழுந்ததில் வலது பக்கம் அதிக சேதம் ஏற்பட்டுள்ளது என்பதையும் மேற்படி வாகன ஆய்வறிக்கைகள் காட்டுகின்றது. இதன்மூலம் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் சம்பவ இடத்தில் வாகன விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும், அந்த விபத்தில் ராஜேந்திரன் மற்றும் சுமதி ஆகியோர் இறந்துள்ளார்கள் என்பதும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:33:53 +0530

14.5. விபத்தானது எதிரியின் அதிவேகம், கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டுள்ளதா என்பதும், எதிரி தான் KA 01 MF 8552 என்ற மாருதி ஸிப்ட் காரை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதும் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை காண வேண்டியதுள்ளது. அ.த.சா.ஆ.1 புகார் மனுவில் "22.12.2024ம் தேதி மதியம் சுமார் 03.45 மணியளவில் எனது அம்மாவும் அப்பாவும் அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் நத்தம் – மதுரை செல்லும் பைபாஸ் சாலையில் வந்து எங்கள் ஊருக்கு வருவதற்காக சாத்தம்பாடி பிரிவில் மேற்படி பைபாஸ் சாலையை கடக்க கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டை கடந்த போது மேற்படி ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி KA 01 MF 8552 என்ற பதிவெண் கொண்ட சித்த காரை பின்னர் விசாரிக்க தெரிந்து கொண்டார் என்பவர் காரை அதிவேகமாகவும் கவன குறைவாகவும் ஓட்டி வந்து எனது அப்பா ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதியதில் விபத்து ஏற்பட்டதாக" தெரிவித்துள்ளார். இதன்மூலம் சாலையை கடக்க முற்பட்டதில் விபத்து ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

14.6. அ.சா.1 இளவரசன் தனது சாட்சியத்தில் "கடந்த 22.12.2024ம் தேதி பகல் 3.45 மணியளவில் கோமனாம்பட்டி பிரிவின் அருகே என் அப்பா, என் அம்மாவை ஏற்றிக் கொண்டு இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தபோது, நத்தத்திலிருந்து மதுரை நோக்கி சென்ற கார் ஒன்று எனது அப்பாவின் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் எனது

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:34:03 +0530

அப்பாவின் மொபைல் மூலம் எனக்கு தகவல் சொன்னார்கள். அதன் பேரில் நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது, என் அம்மாவிற்கு ஒரு கால் உடைந்து பின் பக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், தனது அப்பா அவசர ஊர்தி மூலம் நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14.7. அ.சா.1ன் தனது சாட்சியத்தில் எதிரி விபத்தில் சம்பந்தப்பட்ட காரை ஓட்டி வந்ததாகவோ, கார் வேகமாக வந்ததாகவோ எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும் அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் " எனது பெற்றோர் முடக்கு சாலையில் இருந்து சாத்தாம்பாடி பிரிவுக்கு வருவதற்கு நத்தம் – மதுரை நான்கு வழி சாலையில் எதிர் திசையில் வந்தார்கள் என்றாலும், அது தவறான திசை என்றாலும் சரிதான். முடக்கு சாலையில் இருந்து சாத்தாம்பாடி பிரிவு ஆனது 2 கிலோமீட்டர் தூரம் உள்ளது என்றாலும், மேற்படி இரண்டு கிலோமீட்டர் தூரமும் தவறான திசையில் தான் எனது தந்தை இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். புகார் மனுவில் சாத்தம்பாடி பிரிவில் சாலையில் திடீரென்று குறுக்காக கிழக்கிலிருந்து மேற்காக சென்றபோது விபத்து ஏற்பட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லும் மேற்படி இடத்தில் பேரிகார்ட், சிக்னல் போன்றவை இல்லை என்றால் சரிதான். முடக்கு சாலையில் இருந்து சாத்தாம்பாடி பிரிவு செல்வதற்கு முடக்கு சாலையில் இருந்து வத்திப்பட்டி பிரிவு சென்று மதுரை – நத்தம் சாலையில்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:34:08 +0530

மேற்குபுறமாக செல்ல வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு செல்லாமல் நத்தம் – மதுரை சாலையில் தவறான திசையில் வந்ததில்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், மேற்படி விபத்திற்கு எனது தந்தையின் அஜாக்கிரதைதான் காரணம் என்றாலும் சரிதான். விபத்து நடந்த பகுதியானது நான்கு வழிச்சாலை என்றாலும், கனரக வாகனங்கள் செல்லக்கூடிய சாலை என்றாலும் சரிதான்" என்று தெரிவித்துள்ளார். இதன்மூலம் இருசக்கர வாகனத்தில் வந்த ராஜேந்திரன் என்பவர் சாலை விதிகளுக்கு முரணாக எதிர்திசையில் வந்து திடீரென்று சாலையை குறுக்காக கிழக்கிலிருந்து மேற்காக கடக்கும்போது விபத்து ஏற்பட்டது என்பதை அறிய முடிகிறது. மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5–ன் வாயிலாக சம்பவ இடம் நான்குவழிசாலையில் சாலையின் நடுபகுதி என்பதை அறிய முடிகிறது. நான்குவழிசாலை என்னும் போது, அங்கு சாலையை கடக்க எவ்வித அடையாளமும், எச்சரிக்கை பலகை, விளக்குகள் போன்றவை இல்லாத நிலையில் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

14.8. மேலும் அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் "எனது தந்தைக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது தந்தை ஓட்டி சென்ற வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லை என்றாலும் சரிதான். விபத்து சமயம் எனது பெற்றோர் இருவரும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான்" என்று தெரிவித்துள்ளதன் வாயிலாக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், தலைக்கவசம் அணியாமலும், சாலை விதிகளை பின்பற்றாமலும்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:34:15 +0530

கவனக்குறைவாக திடீரென தேசிய நெடுஞ்சாலையில் குறுக்கே சென்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. எனவே விபத்தானது இறந்தநபரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளது என்பதும், எதிரியால் விபத்து ஏற்படவில்லை என்பதும் அறிய முடிகிறது.

14.9. அரசு தரப்பில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லப்படும் சாட்சியான அ.சா.2 ரஞ்சித் தனது சாட்சியத்தில் "ஆஜர் எதிரியை தெரியாது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மதியம் 4.00 மணியளவில் நான் ஆட்டோவில் சவாரி ஏற்றிக்கொண்டு வத்திபட்டி சென்று இறக்கிவிட்டுவிட்டு மீண்டும் நத்தம்–வத்திபட்டி சாலையில் கோமணாம்பட்டி விலக்கை தாண்டி வடக்கிலிருந்து தெற்காக சென்று கொண்டிருந்தபோது அதே சாலையில் தெற்கிலிருந்து வடக்காக தவறான பாதையில் ராஜேந்திரன் என்பவர் அவரது மனைவி சுமதி என்பவருடன் இருசக்கரவாகனத்தில் சென்றார். நான் அவர் அவ்வாறு செல்வதை பார்த்துவிட்டு சென்றுகொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு மீண்டும் கோமணாம்பட்டி விலக்கிற்கு சென்று பார்த்தபோது சுமதி என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். ராஜேந்திரன் என்பவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் பின்னர் கேள்விபட்டேன். நான் சென்றபோது கூட்டமாக இருந்ததால் வேறு எந்த விபரமும் தெரியவில்லை. எந்த வண்டி மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தபோது சம்பவத்தை பார்க்கவில்லை என்று

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:34:19 +0530

சொன்னேன்" என்று சாட்சியமளித்து அவர் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார். அ.சா.2ன் சாட்சியத்தின் வாயிலாக " விபத்தில் இறந்துபோன இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ராஜேந்திரன் தவறான பாதையில் வாகனத்தை ஓட்டி சென்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேலும் அவர் எதிரி நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்ததாக குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை, அவர் விபத்தை நேரிலும் பார்க்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

14.10. புலன்விசாரணை அதிகாரியான அ.சா.5 தனது குறுக்குவிசாரணையில் "இறந்து போன நபர்கள் இருவரும் இரு சக்கர வாகனத்தில் நத்தம்–மதுரை நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நேர் எதிரே வடபுறமாக வந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சாத்தம்பாடி பிரிவில் குறுக்கே சென்ற போது விபத்து நடந்ததாக தெரிய வருகிறது என்றால் சரிதான். சாத்தம்பாடி பிரிவில் (கோமணாம்பட்டி பிரிவு) குறுக்கே செல்வதற்கு பேரிகார்டோ, வேறு எந்த வசதிகளோ இல்லை என்றால் சரிதான்... மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு இறந்து போன நபரின் R.C.புக், வாகன ஓட்டுநர் உரிமம் ஆகியவை வழங்கப்பட்டதாக தெரியவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று சாலையில் வாகனத்தின் டயர் மார்க், ஸ்கிட் மார்க் ஆகியவை குறித்து குறியீடு செய்ய மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை சம்பவ இடத்திற்கு வர சொல்லி கடிதம் எதுவும் வைக்கப்பட்டதாக இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்து போன நபர்கள் தலைக்கவசம் அணிந்ததாக தெரியவில்லை என்றால் சரிதான்....

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:34:26 +0530

நத்தம்– சாத்தம்பாடி பிரிவிற்கு நத்தம் டு மதுரை நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையில் மேற்கு பக்கம் உள்ள மதுரை– நத்தம் வரக்கூடிய பகுதி வழியாக தான் வாகனங்கள் செல்ல வேண்டும் என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தின் வாயிலாக கோமணாம்பட்டிக்கு செல்ல இறந்து போன நபர்கள் சென்ற பாதை தவறானது என்பது நன்கு அறிய முடிகிறது.

14.11. அரசு தரப்பு சாட்சியங்கள் வாயிலாக பெற்றோர் முடக்கு சாலையில் இருந்து சாத்தாம்பாடி பிரிவுக்கு வருவதற்கு நத்தம் – மதுரை நான்கு வழி சாலையில் எதிர் திசையில் வந்தார்கள் என்பதும், அது தவறான திசை என்பதும் அறிய முடிகிறது. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையிலும், இறந்த நபரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதாக எதிரி தரப்பில் எதிர்வாதம் செய்யப்படும் நிலையில் அரசு தரப்பு சாட்சியங்களை முழுமையாக பரிசிலனை செய்த வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் விபத்தானது எனது பெற்றோரின் கவன குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றாலும், திடீரென்று குறுக்கே வந்ததில் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரிதான். நான் புகாரில் சொல்லியுள்ளது போல் எதிரி அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்று சாட்சியமளித்து இருப்பதும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2யே அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ள நிலையிலும், அவரும் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து கூறும்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:34:30 +0530

நிலையிலும் அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துவதுடன் எதிரி தரப்பு எதிர்வாதத்தை வலு சேர்க்கும் வகையில் அமைந்து இருப்பதும் தெரிய வருகிறது. அரசு தரப்பு சாட்சியங்களை முழுமையாக பரிசிலனை செய்த வகையில் விபத்தில் சம்பந்தப்பட்ட TN 57 K 0357 என்ற வாகனத்தை எதிரி அதிவேகமாக ஓட்டி வந்ததாகவோ, எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவோ அதன் விளைவால் ராஜேந்திரன் மற்றும் சுமதி என்பவர்களுக்கு மரணம் ஏற்பட்டதாகவோ நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்பது தெரிய வருகிறது. எனவே, எதிரியின் மீதான பிரிவு பிரிவுகள் 281, 106(1) BNSன் படியான படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

15. இறுதியாக, எதிரி மீதான பிரிவுகள் 281, 106(1) BNSன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

**<u>பிரிவு 498 BNSSன் கீழான உத்தரவு:</u>**

இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் பிரிவு 498 BNSS–ன் கீழ் உத்தரவு இல்லை.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:34:39 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் அவையறிய 18.04.2026ம் தேதி பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:34:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

**அரசுத் தரப்பு சாட்சிகள் –**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 12.03.2026 | திரு.இளவரசன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | 23.03.2026 | திரு.ரஞ்சித் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | 23.03.2026 | திரு.வினோத் (பார்வைமகஜர் சாட்சி) |
| அ.சா.4 | 23.03.2026 | திரு.ராஜா (பார்வைமகஜர் சாட்சி) |
| அ.சா.5 | 08.04.2026 | திரு.சிவராமகிருஷ்ணன் (புலன்விசாரணை அதிகாரி) |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 / அ.சா.1 | 22.12.2024 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2 / அ.சா.3 | 23.12.2024 | பார்வைமகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 / அ.சா.4 | 23.12.2024 | பார்வைமகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.4 / அ.சா.5 | 23.12.2024 | முதல்தகவல்அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 / அ.சா.5 | 23.12.2024 | மாதிரிவரைபடம் |
| அ.த.சா.ஆ.6 / அ.சா.5 | 23.12.2024 | பார்வைமகஜர் |
| அ.த.சா.ஆ.7 / அ.சா.5 | 23.12.2024 | பிரேத விசாரணை அறிக்கை (ராஜேந்திரன்) |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.8 / அ.சா.5 | 23.12.2024 | பிரேத விசாரணை அறிக்கை (சுமதி) |
| அ.த.சா.ஆ.9 / அ.சா.5 | 23.12.2024 | பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் (ராஜேந்திரன்) |
| அ.த.சா.ஆ.10 / அ.சா.5 | 23.12.2024 | பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் (சுமதி) |
| அ.த.சா.ஆ.11 / அ.சா.5 | 27.12.2024 | மோட்டார் வாகன ஆய்விற்கான வேண்டுகோள் கடிதம் (KA 01 MF 8552) |
| அ.த.சா.ஆ.12 / அ.சா.5 | 20.01.2025 | மோட்டார் வாகன ஆய்விற்கான வேண்டுகோள் கடிதம் (TN 57 K 0357) |
| அ.த.சா.ஆ.13 / அ.சா.5 | 28.12.2024 | பிரேத பரிசோதனை அறிக்கை (ராஜேந்திரன்) |
| அ.த.சா.ஆ.14 / அ.சா.5 | 29.12.2024 | பிரேத பரிசோதனை அறிக்கை (சுமதி) |
| அ.த.சா.ஆ.15 / அ.சா.5 | 27.12.2024 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (KA 01 MF 8552) |
| அ.த.சா.ஆ.16 / அ.சா.5 | 20.01.2025 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 57 K 0357) |

**அரசுத் தரப்பு சான்றுபொருட்கள் :**– இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :**–

இல்லை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:34:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**<u>குறிப்பு –</u>**

1) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் அழைத்து விசாரணை செய்யப்படவில்லை.

3) இவ்வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:34:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.